1975 மார்ச் 7]

Export of mango juice

* 224 *Q*.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether a large quantity of mango juice is being exported from North Arcot district to foreign Countries in recent times; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு வழங்கல் விற்பனைச் சங்கத்தின் மூலம் இயங்கும் கூட்டுறவு பழச்சாறு பதனிடும் தொழிற்சாலை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்த மாம்பழச் சாறு, மாம்பழப் பாகு, மாம்பழத் துண்டுகள், அன்னாசிப் பழத் துண்டுகள் ஆகியவற்றின் விவரங்களாவது :—

ஆண்டு	உற்பத்திப் பொருள்.	அளவு.			ஏற்றுமதிசெய்யப் பட்ட நாடு	மதிப்பு
		டன்-கிலோகிராம்				ரூ. பை.
1971-72	மாம்பழச்சாறு	—			ரஷ்யா	1,79,897·54
1972-73	மாம்பழச்சாறு	347	610	50	ரஷ்யா	8,37,013·3
1974-75	மாம்பழப்பாகு	4	—	—	ஆஸ்திரேலியா	19,047·53
	மாம்பழச்சாறு	1	632	—	அபுதாபி	10,134·37
	மாம்பழத்துண்டுகள்	1	89	600	அபுதாபி	7,011·26
	அன்னாசிப்பழத் துண்டுகள்	28	184	—	போலந்து	1,36,884·14
	மாம்பழச்சாறு	1	20	—	ஓமன்	4,517·43

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தியாகின்ற மாம்பழச் சாறு மற்றும் இதர பழவகைகளுக்கும் மேல்நாடுகளில் நல்ல கிராக்கி இருப்பதாக தெரிகிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை கூட்டுறவுத் துறையில் இதர மாவட்டங்களுக்குப் பரவலாக்க அரசாங்கம் ஏதாவது சிறப்புத் திட்டம் உருவாக்குமா என அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 7

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இந்த மாவட்டத்திலேதான் இந்த வாய்ப்பு இருக்கிறது. அதையே அதிக அளவுக்கு உற்பத்தி செய்ய கப்பாசிட்டி இருக்கிறது. அதை இன்னும் அதிக அளவுக்கு உற்பத்தி செய்து மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முயற்சி எடுக்கப்படும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த வட ஆற்காடு மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற மாம்பழச் சாறுக்கு வெளிநாட்டில் கிராக்கியிருந்தாலும், அந்தத் தொழிற்சாலைக்குத் தேவைப்படுகின்ற மாம்பழம் கிடைப்பதில்லை. அங்கு போதுமான அளவு மாம்பழம் உற்பத்தியாகவில்லை. எனவே, வட ஆற்காடு மாவட்டத்திலேயுள்ள விவசாயிகளுக்கு, மாம்பழப் பயிர் வைக்கின்றவர்களுக்கு, கூட்டுறவுத் துறையிலே பண உதவி செய்து, அவர்களை உற்சாகப்படுத்த அரசாங்கம் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதற்கு விவசாயிகள் முன் வருவார்களானால், பரிசீலிக்கலாம்.

திரு. கே. எ. வகாப் : இந்தக் கூட்டுறவுத் தொழிற்சாலையிலே மாம்பழம் மட்டுமல்லாமல், மற்ற பழங்களும் பதப்படுத்தப்படுகின்றன. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் வீராசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல், போதிய மாம்பழம் இல்லாத காரணத்தாலும், அத்துடன் அங்கு நிர்வாகம் சரியாக நடத்தப்படாத காரணத்தாலும், வேலைகள் சரியாக நடைபெறவில்லை யென்று சொல்லப்படுகிறது. ஆகவே, நிர்வாகத்தைச் சீர்திருத்தி, சரியாக நடத்த ஆவன செய்வதோடு மட்டுமல்லாமல், விவசாயிகளுக்கு, இதனைப் பயிரிடுபவர்களுக்கு, ஏக்கருக்கு இவ்வளவு என்று அதற்கு மானியமாக வழங்க அரசாங்கம் முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் ஏற்கனவே கூறியதைப் போல், கூட்டுறவு முறையிலே விவசாயிகள் முன்வருவார்களானால் கூட்டுறவுத் துறையிலே உதவி செய்யலாம்.